5th March 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, எனக்குக் கிடைத்த தகவல்படி 90 சதவிகித மாணவர்கள், "நாங்கள் தமிழ் படிக்க மாட்டோம் என்று சொல்லி, ஆங்கிலத்திற்குப் போகவேண்டுமென்று சொல்வது அரசிற்குத் தெரியுமா ? மனுச் செய்தவர்களுக்குத் தமிழிலிருந்து வேறு பாடம் மாற்றிக் கொள்ள அரசு அனுமதி கொடுத்திருக்கிறதா ? அவ்வாறு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சென்ற ஆண்டு தமிழில் புகுமுக வகுப்புகளுக்கு ஒதுக்கியது 7,600 இடங்கள். அதில் பாடம் எடுத்துக் கொண்ட 6,364 மாணவர்கள் தமிழை எடுத்துக்கொண்டார்கள். மீதியுள்ள 1,230 இடங்கள் நிரப்பப்படவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மற்ற பாடங்களுக்கு கிராக்கி இருக்கும் போது, இதிலே மட்டும் 1,230 இடங்கள் காலியாக இருக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இதற்கு மாணவர்கள் வந்து சேர்ந்தால் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சேர வரவில்லை. அது தான் அதற்குக் காரணம்.

Schools run without Government Grant.

*173 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether anybody is running a school without receiving any grant from the Madras Government ;

(*b*) if so, the names of persons and the places wherein they run such schools ; and

(*c*) whether the Education Department has approved those schools ?

அரசாங்க நிதி உதவி பெறுத பள்ளிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக சர்க்காரின் எவ்வித நிதி உதவியும் பெறுமல் யாராவது பள்ளிகள் நடத்துகிறுர்களா ?

(இ) ஆமெனில், யார் யார் எங்கெங்கு அத்தகைய பள்ளிகள் நடத்துகிறுர்கள் ?

(உ) அந்தப் பள்ளிகளுக்கு கல்வி இலாகா அங்கீகாரம் அளித்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கண்கார்டியா பயிற்சிப்பள்ளி, ஆம்பூர், பிரசன்டேசன் கான் வென்ட் ஆங்கிலோ இந்திய உயர்நிலைப்பள்ளி, கோடைக்கானல்.

(உ) ஆம்.

Gandhi Statue

*174 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works to pleased to state—

(*a*) whether any representation has been received by the Madras Government to remove the existing Gandhi's Statue at Marina and to substitute another statue of Gandhi in its stead ; and

(*b*) if so, the action taken thereon ?

[5th March 1968

சென்னை கடற்கரையிலுள்ள காந்தி சிலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் காந்தி சிலையை அகற்றி வேறு காந்தி சிலையை அமைக்கக் கோரி தமிழக அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) and (இ) சென்னை கடற் கரையில் உள்ள காந்தி சிலையை அகற்றுமாறு அரசாங்கத்திற்கு வந்துள்ள முறையீடு அரசினரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்தச் சிலையை அகற்ற வேண்டுமென்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் அந்த சிலையருகே உண்ணாவிரதம் இருந்தார். அவரிடம் நான் சென்று மூன்று மணி நேரம் உட்கார்ந்து பேசினேன். நானும் உண்ணாவிரதம் இருப்பேன் என்று சொன்னேன். ஏனென்றால், 'உங்களைப் பார்ப்பதற்கு அழகாக இல்லை ; உங்கள் உருவத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்' என்று சொன்னேன். அவரும் உடனே உண்ணாவிரதத்தை முடித்துவிட்டுப் போய்விட்டார். உதாரண மாக வள்ளுவர் சிலையே எடுத்துக்கொண்டால் மைலாப்பூர் வள்ளுவர் ஒரு மாதிரியாகவும், மெரினா வள்ளுவர் மற்றொரு மாதிரியும் இந்த மன்றத்தில் உள்ள வள்ளுவர் வேறு மாதிரியாகவும் இருக்கிறது. கண்ணகி சிலையும் அப்படித்தான். ஜூபிடர் கண்ணகி சிலை ஒரு மாதிரி யாகவும், பூம்புகார் கண்ணகி இன்னொரு மாதிரியாகவும், மெரினா கண்ணகி மற்றொரு மாதிரியாகவும் இருக்கிறது. ஆகையால் இந்தச் சிலைகள் எங்கும் ஒரே மாதிரியாக அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒருவர் அழகாக இருப்பதற்கும், அழகாக இருப்பவரின் சிலையை விகாரமாக ஆக்குவதற்கும், வேறுபாடு அதிகமாக இருக்கிறது. நண்பர் தியாகராஜன் ஏதோ காந்தி சிலையை அறவே அகற்றிவிடுவோம் என்ற பயத்தின் அடிப்படையில் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். அறவே அகற்றும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. அந்த உருவச் சிலையில் சில மாற்றங்கள் செய்யலாம என்று, இந்த அரசு தன்னிச்சையாக செய்யாமல், காந்தி நூற்றாண்டு விழாக் குழுவினரிடம் யோசனை கேட்டிருக்கிறது. அந்தக் குழுவில் அண்ணா வரும் இடம் பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு நமது கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கிறார். காமராஜர் அவர்கள் இருக்கிறார். நமது மாண்பு மிகு கல்வி அமைச்சர் அவர்கள், அந்தக் காந்தி சிலையில் கண்ணாடி இல்லாமல் இருக்கிறது, அதை வேண்டுமென்றால் பொருத்தலாம் எனற யோசனையை எடுத்துக் கூறினார்கள். பீடம் கொஞ்சம் உயரமாக இருக் கிறது. அதைக் குறைக்கலாம் என்று இன்னொருவர் கூறினார். இவை யெல்லாம் மனதில் வைத்து ஏற்கனவே அந்தச் சிலையை அமைத்த சிற்பியைக் கலந்து முடிவு எடுக்கலாம் என்று இருக்கிறோமே தவிர அவசரப்பட்டு முடிவு செய்யவில்லை. அதைப்போல கண்ணகி சிலையைப் பற்றி ஜாடையாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் வெளியே அதிகமாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சிலையை வைத்த பிறகு அதனுடைய புனிதத் தன்மை கெடாமல் பாதுகாப்பதற்கு இந்த அரசு பின்வாங்காது. கண்ணகியின் சிலையை அமைக்கப் புலவர்களை அழைத்து, சிற்பிகளை அழைத்து அவர்கள் யோசனை கேட்கப்பட்டது. குறிப்பாக சிலப்பதி காரத்தில் அக்கறை உள்ளவர்கள் பலர் சொன்ன யோசனைகளுக்கு ஏற்பத்தான் இந்த சிலை வைக்கப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, மைலாப்பூர் வள்ளுவர் ஒரு மாதிரியாகவும், மெரினா வள்ளுவர் ஒரு மாதிரியாகவும் இருக்கிறது. ஒருவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர்

5th March 1968]

என்றும் ஒருவர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் என்றும் சொல்கிறார்கள். பின்னால் வந்த வள்ளுவர் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்ற குறளில் எட்டு சொற்களிலே மூன்று சொற்கள் வடமொழி சொற்களாக இருப்பதால், அவர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் என்றும் அவருடைய சிலைதான் மெரிஞவில் இருக்கிறது என்று சொல்வது உண்மையா? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உள்ள வள்ளுவருக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஔவையார்தான் பதினெட்டு ஔவையார் இருந்ததாகச் சொல்வார்கள். ஆத்திச்சூடி பாடிய ஔவையார், புறநானூறு பாடிய ஔவையார் என்றும் உண்டு. இங்கே வள்ளுவர் சிலை ஒவ்வொரு விதமாக இருப்பதாகக் கூறுவது சரியல்ல. தியாகராஜனைப் பற்றிக் கூறினால் 40 வயதில் தியாகராஜன் சிலை ஒரு மாதிரியாகவும், 50 வயதில் ஒரு மாதிரியாகவும், 60 வயதில் வேறொரு விதமாகவும் இருக்கும். ஆனால் இங்கே இருக்கிற வள்ளுவர் ஒரே வள்ளுவர்தான்.

திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி : காந்தி சிலையை அகற்ற வேண்டுமென்று தெரிவித்தது யார்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இங்கே அவர் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. ஒரே ஒருவர்தான் சொன்னது. உண்ணாவிரதம் இருந்தவர்தான் அவர். ஸ்தாபன ரீதியில் யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

திரு. எம். எத்திராஜுலு : கடற்கரையில் உள்ள சிலைகள் என்ன உலோகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லாச் சிலைகளும் வெண்கலத்தில் தான் வைக்கப்பட வேண்டும். வெண்கலத்தில் அவசரமாக வைக்க முடியாமல் "பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ்" வைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் வெண்கலச் சிலைகளாக மாற்றப்படும்.

திரு. கே. ராமாராம் : தலைவர் அவர்களே, சிலையை பற்றிச் சொல்வதால் அண்மையில் வைக்கப்பட்ட சிலைகளைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். பல சிலைகள் உதிர ஆரம்பித்துவிட்டன. மெட்டல் சிலை செய்வதாகத் தெரிகிறது. காலதாமதம் இல்லாமல், தற்காலிக சிலைகளை அகற்றிவிட்டு மெட்டல் சிலைகளை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தச் சிலைகள் தனிப்பட்டவர்கள் நிறுவனங்கள் என்ற வகையில் வைத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் இந்தக் கேள்வி அந்த வேலையை விரைவுபடுத்தப் பயன்படும். நானும் சேர்ந்து அதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிலை வேலையை துரிதப்படுத்தப் பயன்படும் இந்தக் கேள்விக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மெரினாவில் உள்ள கண்ணகி சிலை நெடுஞ்செழியனைப் பயமுறுத்தும் கோலத்திலேயே இருக்கிறதே, அதை மாற்றி சாந்த சொரூபமாக உள்ள கண்ணகி சிலை அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எப்போதும் இலக்கியங்களில் முக்கியமான ஒரு காட்சியைத்தான் சிலையாகவும், காப்பியமாகவும் சிற்பிகளும், புலவர்களும் வடிப்பது வழக்கம். உதாரணமாக பாரதியார் பாடும்போது பாரதத்தில் எத்தனையோ இனிய காட்சிகள் இருக்கும்போது, பாஞ்சாலி சபதம் என்ற பகுதியை வைத்துத்தான் தன்னுடைய நாடகக் காப்பியத்தை உருவாக்கியிருக்கிறார். அதைப்போல இன்று நாம் வைத்துள்ள கண்ணகியும், காவியுகு கண்ணீரும், கையில் தனிச் சிலம்பும் ஆவி குடிபோன உயிரும் என்ற நிலையில் நெடுஞ்செழியன் மன்றத்தில் வழக்காடும் கோலத்தில் உள்ள சிலை. இந்த நெடுஞ்செழியன் அல்ல; அந்தக் காலத்துப் பாண்டியன் நெடுஞ்செழியன்.

[5th March 1968

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் காலத்து நெடுஞ்செழியன் அவசரப்பட்டு தவறு செய்த காரணத்தால் அவன் செங்கோல் வளைந்தது. ஆனால் அவன் விட்ட உயிர், வளைந்த செங்கோலை நிமிர்த்துவிட்டுச் சென்றது. ஆகையால் அவசரப்பட்டு செய்த தன் காரணமாக அப்படி நடந்தது என்பது இந்த நெடுஞ்செழியனுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும். இந்த நெடுஞ்செழியன் எதையும் அவசரப் பட்டுச் செய்யமாட்டான்.

திரு. கே. ராமதாஸ் : மவுண்ட் ரோடில் உள்ள முதலமைச்சர் சிலை மறைக்கப்பட்டிருக்கிறதே ஏன் ? அதை மாற்றப் போகிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மறைத்திருப்பதற்குக் காரணம் அந்த இடத்தில் இப்போது சிலையில்லை. அது அகற்றப்பட்டுவிட்டு அங்கே வெண்கலச் சிலை வைப்பதற்காகத்தான் அது மறைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என் வி. நடராசன் : தலைவர் அவர்களே, கோயில்களில் உள்ள பிள்ளையார் சிலைகள் ஒரு இடத்தில் ஒரு மாதிரியாகவும், இன்னோர் இடத்தில் வேறு விதமாகவும் மாறுபட்டு இருக்கின்றன. அச்சிலைகளை ஒரு சீராக அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நடராஜர் சிலைகூட பல கோணங்களில் பல மாதிரி கோவில்களில் இருக்கின்றன.

திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் : வள்ளுவர் மனைவி வாசுகிக்கு சிலை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வள்ளுவர் மனைவி வாசுகியா என்பது ஆராய்ச்சிக்கு உரியதாக இருக்கிறது. வள்ளுவருக்கு மனைவி உண்டா இல்லையா என்று புலவர்கள் கூடி ஒரு சீரான முடிவு எடுத்துச் சொன்னால் அது பற்றி முடிவெடுக்கப்படும்.

மிஸ்டர் சேர்மன் : காந்தியை மறந்துவிட்டு எங்கோ கனம் உறுப்பினர்கள் போகிறார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : வள்ளுவர் குறளை எழுதுவதற்கு அவருடைய மனைவிதான் காரணமாக இருந்தார் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட வாசுகிக்குச் சிலை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வள்ளுவர் இல்லறத்தைப்பற்றி எழுதியிருப்பதால் மனைவி உண்டு என்று தெரிகிறது. ஆனால் அந்த மனைவி வாசுகியா என்பது ஆராய்ச்சிக்கு உரியதாக இருந்து வருகிறது.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்ணகியின் சிலை பல புலவர்களைக் கலந்து அமைக்கப்பட்டது என்று சொன்னார்கள். கண்ணகி தெய்வீக நிலை எய்தியது சேர நாட்டில்தான். ஆகையால் அந்த நிலையில் சிலை வைத்தால் ஏற்றதாக இருக்கும். அரசாங்கம் அதை மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒரு கதாபாத்திரத்தின் சிலைதான் அது. கதையில் பல நிலைகள் உண்டு. காந்தியார் சிலைகூட பல இடங்களில் பல விதமாக, சில உட்கார்ந்து இருப்பதைப்போலவும், சில தக்ளியில் நூற்றுக் கொண்டிருப்பதாகவும், சில ராட்டையில் நூல் நூற்பது போலவும் இருக்கும். அதைப்போல கண்ணகியின் சிலை இப்படிப்பட்ட நிலைகளில் ஒன்றாக இருக்கிறது.

Beautification of Marina

*175 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any scheme under the consideration of the Madras Government to beautify the Marina Beach ; and

(*b*) whether there is any proposal to remove the huts in the Marina area ?